**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section ~~154 Cr.P.C.~~) 173 BNSS
(கு.ந.வி.தொ.பிரி~~வு 154 இன் கீழ்~~)

8044350

1. District மாவட்டம்: கிருஷ்ணகிரி  PS காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு  Year ஆண்டு: 2024  FIR No. மு.த.அ. எண்: 04/AC/2024  Date நாள்: 29.08.2024

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச்சட்டம் 1988  Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: திருத்தப்பட்டசட்டம் 2018  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை 28.08.2024
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை 1500 மணிக்கு முன்பாக
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.08.2024  Time நேரம் : 1430 மணிக்கு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time நேரம் : 15.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: தன்னிச்சையாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: சுமார் 20 கி.மீ. தென் கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் —  (b) Address : முகவரி சார் பதிவாளர் அலுவலகம், காவேரிப்பட்டிணம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. பிரபு  (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் K. சண்முகம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 21.04.1983  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation தொழில் காவல் ஆய்வாளர்  (g) Address : முகவரி ஊ.த.க. பிரிவு, கிருஷ்ணகிரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி. E. ரேவனா, வயது-37, W/o ஆரோக்கியராஜ், சார்பதிவாளர்(பொ) காவேரிப்பட்டிணம் சார் பதிவாளர் அலுவலகம், கிருஷ்ணகிரி(மா)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித்தாளில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station 29/8/24
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.08.2024 at 1630hrs.

Name: பெயர் S.பிரபு
Rank: நிலை ...................... No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
ஊ.த.த. பிரிவு,
கிருஷ்ணகிரி.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.18(HCL-12)p.2

**கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/AC/2024 U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வ.எண்.12-ன் தொடர்ச்சி.**

28.08.2024 ஆம் தேதி மாலை 15.00 மணியளவில் நான் அலுவலக பொறுப்பில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பொறுப்பு சார் பதிவாளராக பணிபுரிந்துவரும் திருமதி.E.ரூபனா அவர்கள் பத்திர பதிவு செய்ய வரும் பொதுமக்களிடமிருந்து ஆவண எழுத்தர்கள் மூலமும், இடைத்தரகர்கள் மூலமும் பத்திரங்கள் பதிவு செய்து கொடுத்ததற்காக பெருமளவு பணம் கையூட்டாக பெற்றுக் கொண்டிருப்பதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அரசு சாட்சிகள் (1) திருமதி.R.தீபா, துணை வட்டாட்சியர்/ வட்ட வழங்கல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். (2) திரு.A.வினோத்குமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர் (பொது), வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம் மற்றும் காவலர் குழுவினருடனும் 28.08.2024-ஆம் தேதி மாலை 16.40 மணிக்கு காவேரிப்பட்டிணம் To பாலக்கோடு சாலையில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றடைந்தோம். அந்த அலுவலகத்தின் தெற்கு நோக்கி இருந்த நுழைவாயிலின் வழியாக உள்ளே நுழைந்தபோது அங்கு வடக்குசுவற்றை ஒட்டி தெற்கு முகம் பார்த்தவாறு இருந்த சார் பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்த திருமதி.E.ரூபனா என்பவரிடம் நான் என்னுடன் வந்த குழுவினரையும் அடையாளம் சொல்லி அறிமுகம் செய்து கொண்டு திடீர் சோதனைக்காக வந்த விவரத்தை தெரிவித்தேன். கிருஷ்ணகிரி ஆயுதப்படையில் பணிபுரியும் பெண் காவலர் திருமதி.S.கொடியரசி அவர்களின் உதவியுடன் அங்கு பத்திரப்பதிவிற்காக வந்திருந்த பொதுமக்களிடம் திடீர் தணிக்கை குறித்த விவரத்தினை கூறி அதற்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக் கொண்டேன். பின்னர் அங்கு பணியிலிருந்த இதர பணியாளர்களை அவரவர் இருக்கையிலேயே அமர்ந்து பணிகளை கவனிக்குமாறு அறிவுறுத்தினேன். பின்பு, அலுவலகத்தில் இருந்த நபர்களான (1) திரு.K.அண்ணாமலை, (2) திரு.R.அண்ணாதுரை, (3) திரு.A.நூருதீன், (4) திரு.C.சசிகுமார், (5) திரு.K.ஸ்ரீநாத் (6) திரு.G.கார்த்திக் ஆகியோரை அழைத்து விசாரணை செய்ததில் திரு.G.கார்த்திக் மற்றும் திரு.K.அண்ணாமலை ஆகியோர் காவேரிப்பட்டிணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஒப்பந்த பணியாளராக இருப்பதாக தெரிவித்தனர். மேலும், அங்கு

நின்றிருந்த இரண்டு தனிநபர்களை அழைத்து விசாரிக்க அதில், ஒருவர் தனது பெயர் திரு.R.அண்ணாதுரை என்றும், இன்று காலை MOD செய்யப்பட்ட ஆவண எண் 3485/2024 என்ற தனது ஆவணத்தை பெற்றுக்கொண்டு செல்வதற்காக வந்ததாகவும் தெரிவித்தார். அவருடன் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க, தனது பெயர் திரு.A.நூருதீன் என்றும், இன்று காலை MOD செய்யப்பட்ட ஆவண எண் 3486/2024 என்ற தனது ஆவணத்தை பெற்றுக்கொண்டு செல்வதற்காக வந்ததாகவும் தெரிவித்தார். அங்கிருந்த மற்றொரு நபரான திரு.C.சசிக்குமார் என்பவரை விசாரிக்க, தான் கிருஷ்ணகிரி மாவட்ட திட்டமிட்ட குற்ற நுண்ணறிவு பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், இரகசிய அலுவலாக வந்ததாகவும் தெரிவித்தார். பின்னர், சார் பதிவாளர் இருக்கை, அதை ஒட்டியிருந்த Data Entry Operator இருக்கை மற்றும் மேற்படி அறை முழுவதும் அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை மேற்கொண்டதில் பணமோ, சந்தேகத்திற்கிடமான ஆவணங்களோ ஏதும் கைப காணப்படவில்லை. பின்பு சார் பதிவாளர் இருக்கையை ஒட்டி இருந்த மேற்கு சுவற்றில் கிழக்கு முகம் பார்த்தவாறு இருந்த நுழைவாயிலின் வழியாக பதிவு வைப்பறையினுள் நுழைந்து பொறுப்பு சார் பதிவாளர் மற்றும் அரசு சாட்சிகள் ஆகியோர் முன்னிலையில் காவல் குழுவினர் உதவியுடன் அந்த அறையில் இருந்த 8 இரும்பு பீரோக்கள் மற்றும் 11 மர பீரோக்களை சோதனை செய்ததில் பணமோ, சந்தேகத்திற்கிடமான ஆவணங்களோ ஏதும் காணப்படவில்லை. பின்னர் மேற்படி பதிவறைக்கு மேற்கு புறத்தில் இருந்த பதிவு வைப்பறை-2-ல் அரசு சாட்சிகளின் முன்னிலையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அறையில் 8 சிமெண்ட் அலமாரிகள், 2 சிமெண்ட் அட்டங்கள், ஒரு இரும்பு பீரோ மற்றும் ஒரு மர அலமாரி ஆகியவை காணப்பட்டன. அவற்றை ஒவ்வொன்றாக சோதனை செய்தபோது அதில் பழைய ஆவணங்கள் மற்றும் கோப்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு அந்த பதிவு வைப்பு அறையின் வடமேற்கு மத்திய பகுதியில் அமைந்திருந்த சிமெண்ட் அலமாரி-2 என்று எழுதப்பட்ட அலமாரியினை சோதனை செய்கையில் அது மேலிருந்து கீழாக நான்கு தட்டுகளாகவும், ஒவ்வொரு தட்டும் தலா 3 அறைகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. அதன் பின்பக்கத்தில் இருந்த முதல் தட்டின் வடக்கு பக்கம் இருந்த முதல் அறையை சோதனையிட்டபோது அதில் குறுந்தட்டு (CD) வைத்து கொடுக்கும் 5 X 5 inch அளவுடைய காக்கி நிற CD பேப்பர் கவர் கட்டு கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதன் மேலே ஒரு காக்கி நிற CD பேப்பர் கவர் ஒன்று மடித்த நிலையில் வைக்கப்பட்டிருந்தது. அதனை அரசு

சாட்சிகளின் உதவியுடன் எடுத்து பிரித்து பார்த்தபோது, அதன் உள்ளே கற்றையாக 500 ரூபாய் நோட்டுகள் வைக்கப்பட்டிருந்தது. அதனை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுகள் 45 (500X45=22,500) எண்ணிக்கையில் மொத்தம் ரூபாய்.22,500/- இருந்தது. பின்னர் மேற்படி அலமாரியின் இரண்டாவது தட்டின் வடக்கு பக்கம் இருந்த முதல் அறையை சோதனையிட்டபோது அதில் குறுந்தட்டுகள் (CD) கட்டு கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதில் குறுந்தட்டுகளுக்கு நடுவே ஒரு காக்கி நிற CD பேப்பர் கவர் ஒன்று மடித்த நிலையில் சொருகி வைக்கப்பட்டிருந்தது. அதனை அரசு சாட்சிகளின் உதவியுடன் எடுத்து பிரித்து பார்த்தபோது, அதன் உள்ளே கற்றையாக 500 ரூபாய் நோட்டுகள் வைக்கப்பட்டிருந்தது. அதனை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுகள் 81 (500X81=40,500) எண்ணிக்கையில் மொத்தம் ரூபாய்.40,500/- இருந்தது. பின்னர் மேற்படி அலமாரியின் மூன்றாவது தட்டின் வடக்கு பக்கம் இருந்த முதல் அறையை சோதனையிட்டபோது அதில் பழைய அலுவலக கோப்பு தாள்கள் கட்டு கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. பின்னர் மேற்படி அலமாரியின் நான்காவது தட்டின் வடக்கு பக்கம் இருந்த முதல் அறையை சோதனையிட்டபோது அதில் பழைய அரசு கையேடுகள் மற்றும் அரசிதழ்கள் போன்ற புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அவற்றிற்கு நடுவில் ஒரு காக்கி நிற CD பேப்பர் கவர் ஒன்று மடித்த நிலையில் சொருகி வைக்கப்பட்டிருந்தது. அதனை அரசு சாட்சிகளின் உதவியுடன் எடுத்து பிரித்து பார்த்தபோது, அதன் உள்ளே கற்றையாக 500 ரூபாய் நோட்டுகள் வைக்கப்பட்டிருந்தது. அதனை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுகள் 74 (500X74=37,000) எண்ணிக்கையில் மொத்தம் ரூபாய்.37,000/- இருந்தது. மேற்படி பணத்தொகைகள் குறித்து பொறுப்பு சார் பதிவாளர் திருமதி. E.ரூபனா அவர்களிடம் விசாரிக்க, அவர் அந்த பணம் குறித்து தனக்கு ஏதும் தெரியாது என்றும், மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக பணிபுரிந்த திரு.G.கார்த்திகேயன் அவர்கள் 4 நாட்கள் தற்செயல் விடுப்பில் சென்றுள்ளதாகவும், அதனால் தன்னை சார் பதிவாளராக பொறுப்பு வகிக்கும்படி மாவட்ட பதிவாளர் அவர்களின் உத்தரவின் பேரில் இங்கு பணிக்கு வந்ததாகவும், தான் இங்கு பணிக்கு வந்து இரண்டு நாட்களே ஆகிறது என்றும் தெரிவித்தார். மேலும் மேற்கண்ட தொகைக்கு அங்கிருந்த எவரும் உரிமை கோரவில்லை. எனவே ரூபாய்.22,500/-, ரூபாய்.40,500/- மற்றும்

ரூபாய்.37,000/- ஆக மொத்தம் ரூ.1,00,000/- பணம் காவேரிப்பட்டிணம் சார் பதிவாளருக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணமாக இருக்கலாம் என்பதற்கான நம்பத்தகுந்த முகாந்திரம் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக மேற்படி பணத்தொகைகள் மடித்து வைக்கப்பட்டிருந்த 5 X 5 inch அளவுடைய மூன்று காக்கி நிற CD கவர்களுடன் சேர்த்து திடீர் சோதனை நடவடிக்கைகள் மூலம் அரசு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அறையில் தொடர்ந்து சோதனை மேற்கொண்டதில் வேறு பணமோ, சந்தேகத்திற்கிடமான ஆவணங்களோ ஏதும் காணப்படவில்லை. பின்னர், மேற்படி அலுவலகத்தில் சார் பதிவாளர் அறைக்கு கிழக்கு புறத்தில் இருந்த கணினி அறையினை பொறுப்பு சார் பதிவாளர் மற்றும் அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்ததில் வேறு பணமோ, சந்தேகத்திற்கிடமான ஆவணங்களோ ஏதும் காணப்படவில்லை. பின்னர் கிருஷ்ணகிரி ஆயுதப்படை பெண் காவலர் 2061 திருமதி.S.கொடியரசி அவர்களின் உதவியுடன் திருமதி.Eரூபனா அவர்களது மேசை டிராயர் மற்றும் கைப்பையினை சோதனை செய்ததில். அவரது கைப்பையில் பணம் மற்றும் நாணயங்கள் என 186 ரூபாய் இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்க தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 28.08.2024 அன்றைய தினம் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் விவரம் குறித்து பொறுப்பு சார் பதிவாளர் திருமதி.E.ரூபனா அவர்களிடம் விசாரிக்க அவர் காவேரிப்பட்டிணம் சார் பதிவாளர் அலுவலகத்தின் 28.08.2024 நாளது A-கணக்கின் விவரத்தினை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்து வழங்கி, அன்றைய தினம் 14 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்காக இணையவழியில் அரசுக்கு பெறப்பட்ட வருவாய் ரூபாய்.1,57,325/- எனவும் தெரிவித்தார். 28.08.2024 நாளது D-கணக்கின் விவரத்தினை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்து வழங்கி, அன்றைய தினம் EC மற்றும் நகல் தொடர்பாக இணையவழியில் அரசுக்கு பெறப்பட்ட வருவாய் ரூபாய்.9,378/- எனவும் தெரிவித்தார். மேலும் இதர வருவாய் இனங்கள் உட்பட 28.08.2024 நாளது H-கணக்கின் விவரத்தினை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்து வழங்கி, அன்றைய தினம் இணையவழியில் அரசுக்கு பெறப்பட்ட மொத்த வருவாய் ரூபாய்.1,81,103/- எனவும் தெரிவித்தார். மேலும் விசாரணைக்காக அலுவலக வருகைப் பதிவேடு (தொகுதி எண்.95) ஆகஸ்ட் மாத பக்கம், தனியார் நிறுவன ஊழியர்களுக்கான வருகைப் பதிவேட்டின் ஆகஸ்ட்

மாத பக்கம், தனி நபர் பணப்பதிவேடு (தொகுதி எண்.09) 28.08.2024-ஆம் நாளுக்கான பதிவுகள் கொண்ட பக்கம் ஆகியவற்றை நான் மற்றும் அரசு சாட்சிகள் பார்வையிட்டு, அதற்கு அடையாளமாக மேற்கண்ட பக்கங்களில் கையொப்பம் செய்யப்பட்டது. மேற்படி ஆவணங்கள் ஒளிநகல்கள் எடுக்கப்பட்டு, பொறுப்பு சார் பதிவாளர் திருமதி.E.ரூபனா அவர்கள் சான்றொப்பமிட்டு வழங்கினார். மேற்கண்ட ஆவண நகல்கள் செயல்முறை நடவடிக்கைகள் மூலம் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பொறுப்பு சார் பதிவாளர் திருமதி.E.ரூபனா அவர்களிடம் இந்த ஆண்டிற்கான கொடிநாள் நிதி இலக்கு ஏதேனும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்று கேட்க, அதற்கு அவர் அவ்வாறு தனக்கு இலக்கு ஏதும் நிலுவை இல்லை என்றும், இணையவழியில் மட்டுமே கொடிநாள் வசூல் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் அரசுக் கணக்கில் உள்ள இருப்புத் தொகை பற்றி அவரிடம் கேட்க, தற்போது சார் பதிவாளர் அலுவலகங்களில் எந்த தொகை செலுத்த வேண்டுமொனாலும் அதை இணையவழியில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும் என்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் நேரடியாக அரசு கணக்கில் செலுத்த வேண்டிய தொகைகள் எதுவும் வசூல் செய்யப்படுவதில்லை என்றும் தெரிவித்தார். இது தொடர்பாக என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கைகள் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலக மடிக்கணினியில் 28.08.2024-ம் தேதி மாலை 16.40 முதல் இரவு 21.15 வரை தயார் செய்யப்பட்டது. அதன் நகலை சார் பதிவாளர் திருமதி.E.ரூபனா அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பிறகு பொது ஊழியரான பொறுப்பு சார் பதிவாளர் திருமதி.E.ரூபனா என்பவர் ஆவண எழுத்தர்களிடமிருந்தும், இடைதரகர்களிடமிருந்தும் மற்றும் பத்திர பதிவு செய்யும் பொதுமக்களிடமிருந்தும் கையூட்டாக பணம் பெற்றுக்கொண்டதற்கான சரியான முகாந்திரம் இருப்பதால் இன்று 29.08.2024-ம் தேதி பிற்பகல் 15.30 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/AC/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 -ன்படி குற்ற வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கிருஷ்ணகிரி அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

29/8/24

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை
கிருஷ்ணகிரி.